பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

18 02 2025 6 30

செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- தேசிய புவிசார் நில அளவைக்கான நக்சா திட்டத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் இன்று மத்திய பிரதேச மாநிலம் ராய்செனில் தொடங்கி வைத்தார்.
- பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.
- தமிழகத்தில் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டங்களுக்கான நிதியை குறிப்பிட்ட காலத்தில் விடுவிக்குமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.
- திருநெல்வேலி மாவட்டம் பொருநை அருங்காட்சியக பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.
- மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

தேசிய புவிசார் நில அளவைக்கான நக்சா திட்டத்தை மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் இன்று மத்திய பிரதேச மாநிலம் ராய்செனில் தொடங்கி வைத்தார்.

26 மாநிலங்கள் மற்றும் மூன்று யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 152 நகரங்களில் உள்ள நிலங்களை ட்ரோன் மூலம் நவீன முறையில் கணக்கெடுக்கும் பணி இந்த திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் பேசிய திரு சிவராஜ் சிங் சௌகான், நில அளவை குறித்த துல்லியமான தகவல்களை நகர்புற உள்ளாட்சி அமைப்புகளும், நில உரிமையாளர்களும் தெரிந்து கொள்வதற்கு இந்த முன்னோடி திட்டம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார்.

நிலப் பதிவேடுகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களை உடனடியாக சரி செய்வதற்கும் இத்திட்டம் பேறுதவியாக இருக்கும் என்று அவர் கூறினார்.

பொதுமக்கள் ஒரு குறிப்பிட்ட நிலம் குறித்த தகவல்களை எவ்வித சிரமமுமின்றி தெரிந்து கொள்வதற்கும், நில பதிவேடுகளை பார்வையிடுவதற்கும் இந்த நவீன தொழில்நுட்பம் உதவுவதாக அவர் குறிப்பிட்டார்.

இணையதளம் வாயிலாகவே நில பதிவுகள் குறித்த தகவல்களை அறிந்து கொள்ள முடியும் என்பதால், நில தாவாக்கள் பெருமளவு தவிர்க்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முன்னோடி திட்டம் மக்களின் நம்பிக்கையை பெரும் என்றம் திரு சிவராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டம் தொடங்கப்பட்டு இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

கடந்த 2016-ஆம் ஆண்டு பிரதமர் திரு நரேந்திரமோடியால் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தின் கீழ் இயற்கை பேரிடர் காலங்கள் மற்றும் உற்பத்தி பாதிப்பை எதிர்கொள்ள விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டு வருகிறது.

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பருவநிலை அடிப்படையிலான பயிர்க்காப்பீட்டுத் திட்டங்கள் விவசாயிகளுக்கு மிகுந்த பயனளித்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் உள்ள விவசாயிகள் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெறும் இழப்பீட்டுத்தொகை தங்களுக்கு உதவிகரமாக உள்ளது என்று நாமக்கல் மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - நாமக்கல் விவசாயிகள் )--- 49 செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் மத்திய அரசின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டங்களுக்கான நிதியை விரைந்து விடுவிக்குமாறு வலியுறுத்தி முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் இன்று எழுதியுள்ள கடிதத்தில் மத்திய அரசின் பங்களிப்புடன் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அங்கன்வாடி மற்றும் போஷான்-இரண்டு திட்டம், மகளிர் சக்தி இயக்கம், குழந்தைகள் பாதுகாப்பு சேவை இயக்கம் போன்ற திட்டங்களை செயல்படுத்துவதற்கு மாநில அரசின் பங்களிப்பு குறிப்பிட்ட காலத்திற்குள் முறையாக வழங்கப்பட்டு வருவதாகக் கூறியுள்ளார்.

மத்திய அரசின் பங்களிப்பு குறிப்பிட்ட காலத்திற்குள் மாநில அரசுக்கு கிடைக்கப்பெறாததால் தாமதமாக வரும் அந்த தொகையை குறுகிய காலத்திற்குள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே சில நேர்வுகளில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் தொகையை முழுமையாக பயன்படுத்த இயலாத சூழ்நிலை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நிதி ஆண்டில் பயன்படுத்தாத தொகை, அடுத்த நிதி ஆண்டில் பயன்படுத்தப்படும் என்றும் அவர் விளக்கம் அளித்துள்ளார்.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் நலத்திட்டங்களுக்கான ஒதுக்கீட்டை குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்குமாறும் திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

திருநெல்வேலி மாவட்டம் ரெட்டியார்பட்டியில் அமைக்கப்பட்டு வரும் பொருநை அருங்காட்சியக கட்டுமானப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு ஏ வ வேலு தெரிவித்துள்ளார்.

இப்பணிகளை இன்று நேரில் ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், பொருநை ஆற்றங்கரையில் நடத்தப்பட்ட அகழாய்வில் கிடைக்கப் பெற்றுள்ள பொருட்களை காட்சிப்படுத்தி தொன்மை சிறப்புமிக்க தமிழர்களின் நாகரீகத்தை உலகறியச் செய்வதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுத்து வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - ஏ வ வேலு ) --44-- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழக வணிகவரித்துறை நடப்பு நிதி ஆண்டின் கடந்த மாதம் வரை ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 235 கோடி ரூபாய் வருவாய் ஈட்டி சாதனை படைத்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற தமது துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் வசூலானதைவிட 12 ஆயிரத்து ஒரு கோடி ரூபாய் அதிகம் என்று கூறினார்.

2017-18 முதல் 2019-20 வரையிலான நிதி ஆண்டுகளில் நிலுவையில் உள்ள வரித் தொகையை அடுத்த மாதம் 31-ஆம் தேதிக்குள் செலுத்துவோருக்கு வட்டி மற்றும் தண்ட தொகை தள்ளுபடி செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரி நிலுவை வைத்துள்ள வணிகர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு திரு மூர்த்தி கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

ஈரோடு மாவட்டம் குண்டேரிப்பள்ளம் நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றம் இடதுபுறக் கால்வாய் மூலம் பாசனத்துக்கு நாளை முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

இதன்மூலம் ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் வட்டத்தில் உள்ள கொங்கர்பாளையம், கவுண்டம்பாளையம், வாணிப்புத்தூர், அரக்கன்கோட்டை மற்றும் புஞ்சைத்துறையம்பாளையம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இரண்டாயிரத்து 498 எக்கர் நிலம் பாசன வசதிபெறும் என மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் விளை பொருட்களை மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டத்தின் மூலம் மறைமுக ஏல முறையிலும், பார்ம் டிரேடிங் முறையிலும் விவசாயிகளின் இருப்பிடத்திற்கேச் சென்று அதிகாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.

இது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று விவசாயிகள் தெரிவித்ததாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - மணிகண்டன் ) --- 42 செகண்ட்*

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டம் பெரியப்பட்டி, செல்லிப்பாளையம், வீசாணம், மற்றும் சேந்தமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் புதிய வழித்தடங்களில் மினி பேருந்துகளை இயக்குவது குறித்து ஆட்சியர் திருமதி உமா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

[]<<<>>>[]

திருவண்ணாமலை நகரில் நில ஆவணங்களை நவீனமாக்கும் திட்டத்தின் முன்னோடியாக ஆளில்லா வானூர்தியை பயன்படுத்தி நில அளவை மேற்கொண்டு வரைபடங்களை உருவாக்கும் நாக்சா திட்டத்தை ஆட்சியர் திரு தர்ப்பகராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

[]<<<>>>[]

தருமபுரியில் மத்திய மாநில அரசுகளின் மகளிர் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகங்கள் சார்பில் பள்ளி ஆசிரியர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சிப் பட்டறை ஆட்சியர் திரு சதிஷ் தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

உதகையில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை அதிக அளவில் வைத்திருந்த கடைக்கு ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்த நகராட்சி அதிகாரிகள் அந்த கடைக்கு சீல் வைத்து அதிரடி நடவடிக்கை மேற்கொண்டனர்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டம் தெக்குப்பட்டு கிராமத்தில் இன்று நடைபெற்ற எருதுவிடும் விழாவில் 250-க்கும் மேற்பட்ட காளைகள் பங்கேற்றன.

[]<<<>>>[]

ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி ஸ்ரீ பர்வத வர்த்தினி அம்மன் திருக்கோவிலில் மகா சிவராத்திரி விழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

[]<<<>>>[]

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று குஜராத் அணி - மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி வதோதராவில் இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் பிரிவு ஆட்டத்தில் இந்தியா — ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் இப்போட்டி இரவு மணி 7-30க்கு தொடங்குகிறது.

*End of News*